# சித்தர் நெறி

மெய்ஞ்ஞானக்கொடி மெய்ஞ்ஞானக்கொடி

சீவநெறி => சிவநெறி => சைவநெறி => மெய்யான இந்துமதம்

## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளியவை



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

பங்குனி மாத வெளியீடு (March-April 2013)
மெய்யான இந்துமத ஆண்டு 43,73,114

# வடலூர் வள்ளலாரும், வடநாட்டு இராமகிருட்டிண பரமஅம்சரும்

காணிக்கை ரூ.4/-



வடலூர் இராமலிங்க அடிகளார்



இராமகிருட்டிணப் பரமஅம்சர்

# உள்ளுறை

இந்த இதழில் வடலூர் அருட்பெருஞ்சோதி இராமலிங்க அடிகளார் மற்றும் இராமகிருட்டிணப் பரம அம்சர் ஆகியோரின் மெய்யான வரலாறுகளே குருதேவர் அருளிய கட்டுரைகளின் மூலம் படித்தறியலாம்.

1. இராமலிங்க அடிகளார் பற்றிய புதிய கண்ணோட்டம்.
2. இராமலிங்கரியலும், இராமகிருட்டிணரியலும்.
3. அன்புச் சேவுகனுக்கு இராமலிங்கரையும், இராமகிருட்டிணரையும் பற்றிய ஆய்வு.
4. இராமகிருட்டிணரியம்.
5. கோசலையாற்றங்கரையில் ஓர் இராமகிருட்டிண மடம்.

# இராமலிங்க அடிகளார் பற்றிய புதிய கண்ணோட்டம்

அருளுபவர்:

அருள்மிகு பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரார் அவர்கள்

## 1) சோதி வழிபாடும் இராமலிங்க அடிகளாரும்:

இராமலிங்க அடிகளார் தன்னை வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் வந்த ஒருவராகத்தான் அறிமுகப் படுத்திக் கொள்கிறார். அப்படியானால், ஏற்கனவே உள்ள சித்தர்கள், சித்தியாளர்கள், அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், மருளாளிகள், மருளாளர்கள், மருளாடு நாயகங்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், ... என்று கூறப்படும் அனைவரின் மரபுகளையும் இவர் ஏற்கிறார் என்றுதான் பொருள்.

ஆனால், இவர் அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்கள், வழிபாட்டு முறைகள்... முதலிய அனைத்தையும் மறுதலித்து விட்டு தமது விருப்பம் போல் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் ஒருவரை அறிமுகப் படுத்தி அவரை வழிபாடுமாறு கூறிச் சென்று விட்டார். ஏன் இப்படிச் செய்தார்? தமது புதிய கடவுளையும், வழிபாட்டு முறையையும் பற்றித் தெளிவாக விளக்கங்கள் சொல்லாமலேயே சென்றுவிட்டாரே ஏன்?

வெறும் விளக்கு வழிபாடுதான் இவர் சொன்ன சோதி வழிபாடா? அப்படியானால் விளக்கு வழிபடுவது என்பது கற்காலம் தொட்டு அல்லது அனாதி காலம் தொட்டு இருந்து வருகின்ற ஒன்றுதானே! இன்றைக்குக் கூட எல்லாப் பெண்களும், ஏழை பணக்காரர் என்ற வேறுபாடின்றி வீடுகளில் அகல்விளக்கு ஏற்றி, மனை விளக்கேற்றி,

குத்து விளக்கேற்றி வழிபடும் மரபு இருக்கத்தானே செய்கிறது. இப்படி அன்றாடம் வழிபடுபவர்கள் இந்தச் சுடர் சோதி வழிபாட்டின் மூலம் மிகச் சிறந்த பயன் அடைந்ததாக எவருடைய பட்டியலும் இல்லை. எனவே, இது பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது.

இராமலிங்க அடிகளார் கூறிய சோதி வழிபாடு என்பது ஏதோ மிகப் பெரிய, அரிய நுட்பமான ஒன்று. அதனை அவர் விளக்கிடுவதற்கு முன்னாலேயே சோதியாகிட நேரிட்டு விட்டது. அந்த நிலை ஏன் ஏற்பட்டது? அவர் காலத்தில் அவரைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியாதவர்கள் நிறைய இருந்தார்களா? அல்லது அவர் பிறர்க்குப் புரிய வைக்க முற்பட வில்லையா? இவை பற்றி யாருமே முறையாகச் சிந்தித்து ஆராயவில்லை.

## 2) அருட்பெருஞ்சோதி வழிபாடு என்பது என்ன?

அருட்பெருஞ்சோதி வழிபாடு என்பது ஐயா அவர்களைப் போலவே ஆடை உடுத்தி, தவவாழ்வு வாழ்ந்து அருட்பாக்களை அல்லும் பகலும் அயராது ஓதிக்கொண்டே இருப்பதுதானா? விளக்கின் சுடரையும், கற்பூரச் சுடரையும் கண்டு கண்டு கண்ணீர் மல்கி களிப்பு எய்துவதுதானா? எந்த விதமான தெய்வீக அநுபவம் இதுவரை அருட்பெருஞ்சோதி ஆண்டவரை வழிபட்டவர்களுக்குக் கிட்டியதாகப் பட்டியல் போட்டு விளக்கப் படவில்லை.

இராமலிங்க அடிகளாரைப் பின்பற்றி ஒரு நூறு ஆண்டுகளுக்கு மேலாகப் பல்லாயிரக் கணக்கான மக்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இவர்களில் யாரேனும் ஒருவர் இருவர்களாவது, ஐயாவின் பெயர் விளங்கும் அளவிற்கு வழிபடும் நிலையைப் பெற்று இருக்கிறார்களா? அதாவது தனித்தனிக் கருவறை மூலவர்களாக ஆகியிருக்கிறார்களா? இதுபற்றி ஏதேனும் ஆய்வு இன்றைய நிலையிலாவது துவக்கப் பட்டு இருக்கிறதா?

ஏனெனில் ஐயா அவர்களே "கடை விரித்தோம் கொள்வாரில்லை" என்று தெளிவாக தன்னுடைய முயற்சியைப் பற்றியும், முயற்சியின் மாபெரும் தோல்வியைப் பற்றியும் மிகமிகத் தெளிவாகவும், நேரடியாகவும்

கூறிச் சென்று விட்டார். அவர் காலத்திலேயே அவருடைய நேரடி முயற்சியாலும், பயிற்சியாலும் உருவானவர்கள் என்று பட்டியலிட்டுக் காட்ட முடியாத நிலை இன்று வரை இருந்து வருகிறது. இது ஏன்? ஏன்? ஏன்?

## 3) வள்ளல் பெருமான் எப்படி அவர் காலத்தில் போற்றப்பட்டார்?

வடலூர் வள்ளல் பெருமான் சென்னை கந்தகோட்டம் முருகன் கோயில், திருவொற்றியூர் கோயில், காஞ்சிபுரம் கோயில்.... என்று வடக்கே அறிமுகம் ஆனதிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரை மிகத் தெளிவாக அறிமுகமாகி இருந்து இருக்கிறார்.

'அவருடைய வெள்ளாடை மூடிய மேனி, வெண்ணீறு ஒளிர் விட்ட நெற்றி, ஊழிப் பெருந்தீயின் சுடர் உமிழ்ந்த பாதி மூடிய கடைக்கண் பார்வை, தென்றலின் நளின அசைவு, புயலின் வேகம், மேகம் தவழ்வது போன்ற நடை, புன்னகை தவழும் முகம், கனியினும் மிகுந்த சுவை மிக்க சொற்கள், யாழின் இனிமை மிக்க குரல் ஒலி, கேட்பாரை மெய்மறக்கச் செய்யும் பாடும் திறன்... முதலியவை பெற்றிருந்த வடலூர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர், அருட்கொடை வள்ளல், திருவருட் பிரகாச அருட்பா கொடை வள்ளல் இராமலிங்க அடிகளார்' என்று சித்தர் கருவூரார் வழி வந்த கண்டபப்க் கோட்டைச் சித்தர் ஏளனம் பட்டியார் எனப்படும் உ.இராமசாமிப் பிள்ளை குறிக்கிறார். இவரைப் போல் பலரும் வள்ளல் பெருமானைப் பற்றிய குறிப்புக்களை எழுதி வைத்து இருக்கிறார்கள்.

செங்கற்பட்டு, தென்னாற்காடு, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், திருநெல்வேலி கார்காத்த வேளாளர்கள், கருணீக்க வேளாளர்கள், சோழிய வேளாளர்கள், கொடிக்கால் வேளாளர்கள்... முதலியோர் தங்களுடைய சாதியின் தலைவராக; தங்களின் குலதெய்வமாக; நினைத்துப் போற்றினார்கள். ஐயா, வடலூரில் கொண்டாடிய தைப்பூச விழாவினை மேற்படி மாவட்ட வெள்ளாளர்கள் அனைவரும் தங்களது குல தெய்வ விழாவாகவே நினைத்துக் கொண்டாடினர். சொல்லப் போனால், தென் தமிழ்நாடு முழுவதும் இருந்து நெல் அறுவடை செய்து புது நெல்லில் தயாரித்த புழுங்கல் அரிசியையும்,

பச்சரிசியையும் எடுத்துக் கொண்டு அவரவர் வசதி வாய்ப்புப்படி தென்னை மரம் உடையவர்கள் தேங்காய்களும், கரும்பு பயிரிட்டவர்கள் வெல்லமும் காணிக்கையாக எடுத்துக் கொண்டு தைப்பூசத்திற்கு (10) பத்து நாட்களுக்கு முன்பே; மாட்டு வண்டிகளில் வடலூர் நோக்கிப் பயணப் பட்டிட்டார்கள். செட்டி நாட்டார்கள் சைவ சமயப் பற்று மிக்கவர்கள் என்பதால் சிவப் பழமாகத் திகழ்ந்த வள்ளல் பெருமானை மாதப் பூசங்களிலும் கூடத் தவறாமல் வந்து வழிபட்டுச் சென்றார்கள். [5-10-1823 முதல் 30-1-1874 முடிய இராமலிங்கர் காலம்].

## 4) இந்தியா முழுதுமிருந்த அரசர்களும் வள்ளலாரிடம் அருள்பெற்றனர்:

ஆங்கிலேயர்கள் ஆட்சியைப் பிடிக்க நடத்திய நேர்மையற்ற, நீதியற்ற, கருணையற்ற ஆட்சிமுறைக் கொடூரச் செயல்கள் தலைவிரித்து ஆடிய நேரத்தில் கருணை வடிவாக வள்ளல் பெருமான் வாழ்ந்தார் என்பதால்தான் ‘***கருணையில்லா ஆட்சி கடிது ஒழிக***’ என்று அரசியலைப் பற்றிக் கூடக் கருத்து வெளியிட்டார்.

அதாவது, நாட்டு நடப்பில் வடக்கே யிருந்த காசுமீரப் பள்ளத்தாக்கு சிற்றரசர்கள், கங்கைக்கரை (காசி அரச குடும்பத்தவர்) அரசர்கள், பரோடா அரச குடும்பத்தார்கள், ஐதராபாத் நிசாம் அரச குடும்பத்தார்கள், தமிழகத்துச் சிற்றரசர்கள், பாளையக்காரர்கள், ஆற்காடு நவாப்புகள், மைசூர் அரச குடும்பத்தார்கள், கேரள நாட்டு அரச குடும்பத்தார்கள்.... முதலிய பல அரச குடும்பத்தார்களும், அருள்நலம் வேண்டி நேரடியாகவே, அருட்கொடை வள்ளல் பெருந்தகையிடம் இறைஞ்சி அருளைப் பெற்று உயிர்பெற்று வாழ்ந்தார்கள்.

அவர்கள்தான், அருட்பேரரசராக இருந்த அருட்பெருஞ்சோதி ஆண்டவரிடம் பொருளுலக ஆட்சியில் உள்ள அரசியல் மோசடிகளையும், கொடுமைகளையும், கடுமைகளையும் விளக்கி உரைத்து தங்களுக்குப் பாதுகாப்பும், அருளும் வேண்டினார்கள். அவர்களால்தான், அருளுலக சிந்தனைகளிடையே வாழ்ந்த ஐயா அவர்கள் பொருளுலக சிந்தனைகளையும் பெற வேண்டியிருந்தது. இந்த அளவு இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் தெரிந்த ஓர் பெரிய அருளாளராக விளங்கிய

அருட்பெருஞ்சோதி ஆண்டவர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் தொகுக்கப் படாமல் போனது ஏன்?

## 5) வள்ளலாரின் வாழ்க்கை வரலாற்றுச் செய்திகளில் இருட்டடிப்பு:

வள்ளல் பெருமான் காசிக்கும், பூரி சகன்னுதர் ஆலயத்திற்கும் சென்று வந்திட்டார் என்ற குறிப்பு கிடைக்கும் போது, அவர் ஏன் பனிமூடிய இமயமலைப் பகுதிகளில் நடந்து திருக்கயிலாயத்தைச் சென்று பார்த்திருக்க மாட்டார்? பாரதப் போர் நடந்த குருச்சேத்திரத்தையும், பிருந்தாவனத்தையும், இராமனின் அயோத்தியையும் சென்று பார்த்து வந்த வரலாறு ஏன் மறக்கடிக்கப் பட்டது? அவ்வளவு ஏன்? அவர் அடிக்கடி சிதம்பரம், திருவண்ணுமலை, சீர்காழி, திருவானைக்காவல், மதுரை, இராமேச்சுரம், திருநெல்வேலி, திருச்செந்தூர், கன்னியாகுமரி... முதலிய இடங்களிலும் சென்று வழிபாடு நிகழ்த்தியதையே தமிழகத்து மக்கள் மறைத்து விட்டார்கள், மறைப்பதற்குத் துணைசெய்து விட்டார்கள், மறந்து விட்டார்கள்.

## *பிருமணர்கள்தான் தமிழின அருளாளர்களை இருட்டடிப்புச் செய்கின்றனர்:*

இவற்றை எண்ணிப் பார்ப்போமாஞல்தான் உண்மையான இந்துமதம், பொய்யான ஹிந்துமதம் என்ற இரண்டு பெரிய போராட்ட சத்திகளைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியும். அதாவது, இந்துமதத்தில் தமிழ்மொழிக்கும், தமிழ் இலக்கியங்களுக்கும், தமிழ் அருளாளர்களுக்கும், தமிழர்களால் வழிபடக் கூடிய வழிபாட்டு நிலையங்களுக்கும், சன்னிதானங்களுக்கும், கடவுள்களுக்கும், தமிழின மடாதிபதிகளுக்கும், பீடாதிபதிகளுக்கும், ஆச்சாரியார்களுக்கும், குருக்கள்களுக்கும், குருமார்களுக்கும், சாத்திரிகளுக்கும், சித்து விளையாடல் காரர்களுக்கும்; சமசுகிருத வெறிபிடித்த பிறமண்ணினரான பிருமணரால் கட்டுக்கோப்பாக அவமதிப்பும், புறக்கணிப்பும், இழிவும், பழியும், தொல்லையும், இருட்டடிப்பும், இன்னலும், மறைமுக எதிர்ப்பும், மறுப்பும், ஏச்சும், பேச்சும், ஏளனமும், பகடியும், புகையும், பகையும் தொடர்ந்து அடர்மழை போல் நிகழ்த்தப் பட்டு வருவதை உணரலாம்.

## வள்ளலாரின் பேரருட்திறன் பத்தர்களால் புரியமுடியாத நிலை:

அதாவது, இம்மண்ணுலகில் தோன்றிய அருளாளர்களில் எவருமே எழுதிக் காட்டாத அளவிற்கு செத்தாரை எழுப்புதல் தம்மால் முடியுமென்ற கருத்தை எழுதிக் காட்டினார். அதுவும் சிதைந்து செல்லரித்த எலும்புத் தொகுதியைக் கூட வனப்பும் வாலிப்பும் உடைய ஊன் உடம்பு பெற்று உயிர்த்து எழச் செய்யும் ஆற்றல்; தான் உடம்பின் மீது போர்த்திக் கொண்டிருக்கக் கூடிய போர்வையின் தெய்வீக ஆற்றலால் நிகழும்.

> "... ***ஊன் புரிந்து மீள உயிர்ப்பித்தல்***
> ***நான் மேற்போர்த்த கம்பளத்தால்***
> ***ஆகும் களித்து*** ..."

என்று மிகத் துணிவோடும், தன்னடக்கத்தோடும், தன்னுடைய உடம்பைத் தொட்ட ஆடைக்குக் கூட [உயிரற்ற பொருளுக்குக் கூட தெய்வீகத் தன்மை உண்டு என்பதை] அருளுலக ஆற்றலுண்டு என்பதை ஆணித்தரமாக விளக்குகிறார். ஆனால், அவரைச் சுற்றி இருந்தவர்களில் யாருக்கும் அவருடைய மேலாடையைப் பரிசாகப் பெறும் தகுதி இருக்கவில்லை. அதுதான் வேதனை.

அவர் மிகத் தெளிவாக மரணமிலாப் பெருவாழ்வு பற்றியும், காயசித்தி பற்றியும், பொன்னுடல் பற்றியும், இறைவனின் திருக்கரத்தால் அமுதம் பெற்றுண்டது பற்றியும் .... மிகமிகத் தெளிவாக விளக்கி உரைக்கிறார். இப்படிப்பட்ட இவரைச் சுற்றி "பழமரத்துப் பறவைகள் போல்" எந்நேரமும் பத்தர் கூட்டம் இருந்தது. ஆனால், அவர்கள் இவரை முழுமையாகப் புரிந்து விரும்பி ஏற்று அருட்பயனைத் துய்க்க வில்லை. இவரும் தான் அருளுலகில் வாழையடி வாழையெனத் தோன்றிப் பழமரமாக இருந்தும் பத்தர்கள் தன்னைப் பயன்படுத்திக் கொள்ள வில்லையே என்று வருந்தினார் வள்ளல் பெருமானார்.

## வள்ளலார் மக்களிடையே செயல்பட்ட விதம்:

தமது வாழ்நாளிலேயே அருளுலக வாரிசுகளை உருவாக்கிட வேண்டுமென்ற பேரார்வத்தால் ஆயிரக்கணக்கில் அருட்பாக்களை எழுதினார்.

வெறும் மந்திர மாயங்களையும், அற்புதங்களையும் விளைவித்து ஒரு கண்மூடித்தனமான கூட்டத்தைத் தன்பின்னால் திரட்டாமல் புராண இதிகாசச் சொற்பொழிவுகளையும், இலக்கிய விரிவுரைகளையும், அருளுரைகளையும் நாடெங்கும் வழங்கினார். பல அருளாளர்களையும் நேரில் சென்று கண்டு, அவர்களுக்கெல்லாம் தழைத்து செழித்து வளர்ந்திட அருளெனும் நீரை மழையாகப் பொழிந்தார்.

அதாவது, நாடெங்கும் அருட்பயிருக்கு வேலி கட்டுவது போல் **தமிழ்மொழியால்** மேன்மை, தொன்மை, வன்மை, நுண்மை, திண்மை, உண்மை, பான்மை, பயன், இலக்கிய வளம், இலக்கிய வரலாறு, இலக்கியக் கலைஞர்களின் வரலாறு, சித்தர்கள் வரலாறு, பூசாவிதிகள், நாயன்மார்கள் ஆழ்வார்கள் சித்தியாளர்கள் வரலாறுகள், அரசர்களில் அருளுள்ளம் கொண்டோர்களின் வரலாறுகள், அருளாளர்களில் அரசநிலை பெற்றோர்களின் வரலாறுகள், அருளுலக முதன்மை பெற்ற வழிபாட்டு நிலையங்களின் வரலாறுகள்... முதலியவைகளை யெல்லாம் எளிய உரைநடையில் உரையாடல்களின் மூலம் வழங்கினார். சொற்பொழிவுகளின் மூலம் வழங்கினார். இவற்றைக் கேட்க மக்கள் வடலூரிலும், சிதம்பரத்திலும், காஞ்சியிலும், சென்னையின் பல பகுதிகளிலும் நிறைய கூடினார்கள். இவரை அருளாளராகப், பேரறிஞராக, ஆச்சாரியாராக, குருபீடமாக, இறைவனின் [திருஅவதாரமாக] திருத்தோன்றலாக, இறைவனாக... நினைத்து மக்கள் கூட்டம், இவரின் ஆதரவாளர்களாக, அடியார்களாகத் திரிந்தார்கள்.

## தமிழின எதிரிகள் வள்ளலாரை எதிர்த்த விதம்:

***இவர் ஒரு தமிழர்*** என்பதால் தமிழினப் பகைவர்கள், தமிழின எதிரிகள், தமிழின விரோதிகள் இவருக்கு மறுப்பாகச் செயல்பட்டார்கள். ஆனால், அவர்களின் தவறான சொல்லும் செயலும்கூட கடலில் கரைத்த பெருங்காயம் ஆயிற்று. எனவே, கும்பகோணத்து சங்கரர் மடத்து மடாதிபதியின் தலைமையில் எதிர் அணி உருவாயிற்று. சிருங்கேரி பீடத்து சங்கராச்சாரியாரும், பூரி மடத்து சங்கராச்சாரியாரும் பக்கபலமாகத் துணைப் படைத்தளபதிகள் ஆனார்கள்.

அறியாமைக்கும், அருளுக்கும் போர் மூண்டது. கடலூர் கெடிலம் ஆற்றங்கரையில் ***சிலை வணக்கம் (உருவ வழிபாடு) தேவையா? இல்லையா?*** என்ற கருத்தை மையமாகக் கொண்டு போரிட சங்கராச்சாரியார்கள் நாள் குறித்தார்கள். ஆனால், அருளே வடிவான வள்ளல் பெருமான் அமைதியாக அருட்போரை நிகழ்த்திட ஆரவாரம் ஏதுமின்றி ஆள்பலமின்றி தனித்து கடலூர் கெடிலம் ஆற்றங்கரைக்குப் புறப்பட்டார். போருக்குரிய நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்பே திருப்பாதிரிப் புலியூரில் ஆலய வளாகத்தில் வந்து தங்கினார்.

சங்கராச்சாரியார்களின் போர்க்கோலம் பற்றியச் செய்தி காட்டுத்தீ போல் எங்கும் பரவிற்று. மக்கள் வெள்ளம் வள்ளல் பெருமானுக்கு ஆதரவாகத் திரண்டது. தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ஆங்கிலேயரும், மாவட்டக் காவல் துறையும் எதிர்பார்த்துப் பெரிய பாதுகாப்புகளுக்கு ஏற்பாடுகள் செய்தனர். இந்த அருட்போர் தமிழினத்துக்கும், பிருமணர்களுக்கும் நடக்கக் கூடிய இனப்போராக அல்லது சாதிப் போராக மாறிவிடக் கூடாது என்றஞ்சிய சங்கராச்சாரியார்கள் பின்வாங்கினார்கள்.

அவர்கள் போருக்காக வரவில்லை. சூழ்ச்சியாக வள்ளல் பெருமானை ஒழிக்கத் திட்டமிட்டார்கள். ஆனால், நிழலே விழாத அளவிற்கு அருவுருவ அழியாத அமுதத் தேகம் பெற்றிட்ட வள்ளல் பெருமானை யாரும் எதுவும் செய்ய முடியவில்லை. சில நாட்கள் திருப்பாதிரிப் புலியூரில் தங்கி விட்டுப் பிறகே வடலூர் திரும்பினார், ஞானசித்தர் இராமலிங்க அடிகளார்.

தொடர்ந்து பல மாதங்கள் தமிழகம் எங்குமிருந்தும், கெடிலம் ஆற்றங்கரையில் நிகழ இருந்த அருட்போர் பற்றிய செய்தித் தொடர்பாக பத்தர்களும், விருப்பாளர்களும், ஆதரவாளர்களும் வடலூர் நோக்கி வந்து கொண்டே இருந்தார்கள். இருந்தாலும் ஐயா அவர்களின் மனம் அமைதி பெறவில்லை. ஐயாவைப் புரிந்து கொண்டவர்களே, ஐயாவிடமிருந்து அருளுலகப் பேருண்மைகளைப் பயிற்சியாகப் பெறுபவர்களே இல்லை என்ற நிலையே ஏற்பட்டது. ஐயாவிற்கு மிக நெருக்கமான ரெட்டியார்,

உடையார், நாயக்கர், பூச்சி (தீட்சகர்) தீத்தச்சர், முதலியார் (தொழுதூர் வேலாயுத முதலியார்) ... முதலியோர்களும் ***ஐயா மனம் வெறுக்கும் அளவிற்கு சமசுகிருத வேத மதத்துக்கும், பிருமணர்களுக்கும் ஆதரவான அடிமைகளாக இருந்திட்டார்கள்***. எனவேதான், ஐயா அவர்கள் அருட்பெருஞ்சோதி ஆண்டவரோடு இரண்டறக் கலந்திடும் முடிவை மேற்கொண்டிட்டார்.

## 6) வள்ளலார் இந்துமதத்தால் உருவான அருளாளரே!

இன்று வரை யாருமே வடலூர் வள்ளலாரின் சமகாலத்தவர்கள் வழங்கிய செய்திகளைத் தொகுத்து ஆய்வு செய்து வரலாறும், வாழ்வியலும், வாழ்வியல் சாதனைகளும், போதனைகளும் பற்றிய நூல்களை எழுத முற்படவில்லை. இல்லை, இல்லை, இல்லவே இல்லை.

இன்னும் சொல்லப் போனால் **வள்ளல் பெருமானார் வழிபட்ட கடவுள்களையும், கடவுள்கள் பற்றிய வரலாறுகளையும், பூசாவிதிகளையும், புராண இதிகாச இலக்கியங்களையும், கலைகளையும் தோற்றுவித்த பதினெண் சித்தர்கள் பற்றியும்; அவர்கள் வழங்கிய சித்தர் நெறி என்னும் இந்துமதம் பற்றியும்; அவர்களின் கருவழி வாரிசுகளையும், விந்துவழி வாரிசுகளையும், குருவழி வாரிசுகளையும் பற்றிய பேருண்மைகளையும் ஆராய்ந்திடும் ஓர் அறிவார்ந்த அருள்நெறிக் கூட்டமாக இராமலிங்க அடிகளாரின் பத்தர்கள் மாறாதது ஏன்? ஏன்? ஏன்?**

**அகல் விளக்கொளியில் அருட்பா பாராயணம் செய்தால் மட்டும் போதும் என்று அவசர முடிவை எடுத்தது யார்? ஏன்? எப்பொழுது? எப்படி?**

இன்றுவரை இராமலிங்க அடிகளாருக்கு இந்துமத முறைப்படி ஆறுகாலப் பூசைகள் நடைபெறும் ஆலயங்கள் அமைக்கப் படாதது ஏன்? ஏன்? ஏன்? ஏற்கனவே உள்ள அனைத்து ஆலயங்களுக்கு உள்ளும், கோயில்களுக்கு உள்ளும், பிறவகை வழிபாட்டு நிலையங்களுக்குள்ளும், அருட்கொடை வள்ளல் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் இராமலிங்க அடிகளாருக்குத் தனிக் கருவறைகள் அமைக்கப் படாதது ஏன்?

இராமலிங்க அடிகளாரை இதுவரை இருந்துவரும் இந்து மதத்தின் அமைப்புக்களிலிருந்து மாறுபட்டவர் அல்லது வேறுபட்டவர் என்று பிறர் எண்ணும் வண்ணம் அருட்பெருஞ்சோதி வழிபாட்டை மட்டும் வலியுறுத்தி; மற்றவற்றைக் கண்டிக்கும் போக்கும் நோக்கும் அடிகளாரின் பத்தர்களுக்கு வரக் கூடாது. ஏனெனில், அடிகளார் திடீரென்று ஞானோதயம் வந்ததென்றோ, தான் புதியதொரு தத்துவத்தையே தோற்றுவிப்பதாகவோ கூறவே இல்லை.

அவர் வழிபட்டது ஏற்கனவே இருந்து வந்த அனைத்து வகையான இந்துமதக் கோயில்களையும் (48 வகை), மற்ற அனைத்து வகையான அருளாளர்களையும்தான். அவர், சோதி வழிபாட்டிற்கு ஞானசபை என்றுதான் பெயரிட்டார். இந்த அடிப்படையில் ஆராய்ச்சிகளும், பயிற்சிகளும், முயற்சிகளும் நடந்தால்தான் அவருடைய கனவு நனவாகும்.

*ஓம் திருச்சிற்றம்பலம்!*

**//இதன் மூலம்: 1985இல் வெளிவந்த 18, 19, 21, 22 ஆகிய குருதேவர் அறிக்கைகளில் அச்சாகிய தொடர் கட்டுரை.//**



**அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!**
**தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சொதி!**

# இராமலிங்கரியலும், இராமகிருட்டிணரியலும்

**இராமலிங்க அடிகள் காலம்: 5-10-1823 முதல் 30-1-1874 முடிய.**
**இராமகிருட்டிணர் காலம்: 18-2-1836 முதல் 16-8-1886 முடிய**

## 1. மனிதன் முயன்று கடவுளாகலாம்:

பதினெண்சித்தர்கள் **“அனைத்து வகையான பயிரினங்களும் உயிரினங்களும் தங்கள் தங்களின் முயற்சிகளின் முதிர்ச்சிகளாலும், பயிற்சிகளின் தேர்ச்சிகளாலும் படிப்படியாகப் பல பிறப்புக்களால் அருளாற்றலைப் பெற்று; அமரர், தேவர், தேவதை, தெய்வம், ஆண்டவர், இயவுள், இறை, எல்லா (அல்லா), கடவுள் ... எனப்படும் 48 வகையான நிலைகளை அடைந்திடுவர்** ...” என்று கூறும் தத்துவமே மெய்யான இந்து மதத்தின் அடிப்படையும் உள்ளீடும் ஆகும். இதன்படிதான், நான்கு யுகங்களாக உலகம் முழுவதும் பல்வேறு வகையான சித்தர்களும் (பதினெட்டு வகையும், 48 வகையும்) பத்தியாளர்களும், சத்தியாளர்களும், சித்தியாளர்களும், முத்தியாளர்களும், கருக்களும், குருக்களும், தருக்களும், திருக்களும், அருளாளர்களும், அருளாளிகளும், அருளாடுநாயகங்களும், மருளாளர்களும், மருளாளிகளும், மருளாடு நாயகங்களும், எண்வகை ஆச்சாரியார்களும், 13 வகைக் கருவழி ஆச்சாரியார்களும், 13 வகை குருவழி ஆச்சாரியார்களும், 48 வகை பீடாதிபதி வழி ஆச்சாரியார்களும், தேவகுமாரர்களும், தேவதூதர்களும், மகாவீரர்களும், புத்தர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும், அடியார்களும், ... தோன்றி வருகின்றனர்.

இதன்படியே சென்ற நூற்றாண்டில் பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமத மறுமலர்ச்சிக்காக, வளமைச் செழிச்சிக்காக, வலிமைப் பொலிவுக்காகத் தென்னாட்டில் தோன்றியவர் வடலூர் அருட்பெருஞ்சோதி இராமலிங்க அடிகளார், வடநாட்டில் தோன்றியவர் இராமகிருட்டிண பரமஅம்சர் ஆகிய இருவரும் ஆவர்.

## 2. சமுதாயச் சீர்திருத்தப் போராட்ட வீரர்களே இவர்கள்:

இவர்கள் இருவருமே சாதிமத வெறிகளை வெறுத்து ஒதுக்கினர், அடக்கி ஒடுக்கிக் குறைத்திட முற்பட்டனர். அனைத்து மக்களும் சமத்துவ சகோதரத் தத்துவத்தோடு வாழப் பாடுபட்டனர். இந்துமதத்திலுள்ள அனைத்து வகையான வேற்றுமைகளையும், ஏற்றத்தாழ்வுகளையும் முழுமையாக அகற்றிடப் பாடுபட்டனர். பெண்ணடிமையை எதிர்த்தும் மறுத்தும் அறப்போர் நிகழ்த்தினர். பதினெண்சித்தர்கள் நெறிப்படி **'கடவுளைக் கண்ணால் காணலாம், கடவுளோடு பேசலாம், பழகலாம், கடவுளாகவே மாறலாம்** ...' முதலிய கருத்துக்களுக்கு இவர்கள் இருவருமே சான்றாகவும் ஊன்றாகவும் விளக்கமாகவும் ஆகின்றார்கள்.

## 3. பள்ளிப்படிப்பு இல்லாமலேயே உயர்ந்தவர்களே இவர்கள்:

இராமகிருட்டிணர் அவர்கள் முறையாகப் பள்ளிக்கூடத்தில் இரண்டாம் வகுப்பு மட்டுமே படித்தவர். ஆனால், வடலூர் அருட்கொடை வள்ளல் அருட்பெருஞ்சோதி இராமலிங்க அடிகளார் பள்ளிக் கல்விக்கே செல்லவில்லை. இப்படி இருவரும் பள்ளிக் கல்வியைப் பெறாதவர்களாக இருந்த போதிலும் இவர்களுடைய கருத்துக்களும், செயல்களும், போதனைகளும், சாதனைகளும், வாழ்வியல்களும் அனைத்துப் பள்ளிக் கூடங்களிலும் படிக்கப் படுவனவாகவும், பேசப் படுவனவாகவும் மாறியிருக்கின்றன. அதாவது பதினெண்சித்தர்கள் **'சாகாக்கல்வி, மெய்ஞ்ஞானக் கல்வி, அருட்கலைகள், ஞானவாழ்வியல் பேருண்மைகள்... முதலிய அனைத்தும் ஊழ்வினை யிருப்பின் ஓதாமல் உணரலாம்'** என்று கூறும் கருத்து இவர்கள் இருவராலும் செயல்வடிவில் விளக்கப் பட்டுள்ளது.

எனவேதான், இருவரையும் ஞானசித்தராக, வேத சித்தராக, நவநாத சித்தராக இன்றைய குவலய குருபீடம், இந்துமதத் தந்தை, அருளாட்சி நாயகம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் அறிவிக்கிறார்.

## 4. வள்ளலார் கடவுளரோடு நேரில் பழகினார் என்பதற்குச் சான்றுகள்:

இராமலிங்க அடிகளார் சிறுவனாக இருந்த பொழுதே திருத்தணியில் எழுந்தருளி யிருக்கும் முருகப் பெருமானை நேரில் கண்டு பேரின்பம் அடைந்து பத்தி மேலீட்டால் எண்ணற்ற அருட்பாக்களைப் பாடினார்.

அப்படி அவர் திருத்தணி முருகப் பெருமானைப் பாடியிருக்கும் பாடல்கள் அனைத்தும் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு அருட்பா தொகுதியில் 'ஐந்தாம் திருமுறை' என்று தனிச்சிறப்புடன் பாராட்டப் படுகின்றன. அதாவது, தனது ஒன்பதாவது வயதிலே அவர் இறைவனால் ஆட்கொள்ளப் பட்டதை '*ஆடையிலே எனை மணந்த மணவாளா*' என்று தெளிவாகக் குறிக்கின்றார்.

இதேபோல அவர் தான் கண்ணாடியில் கண்ட முருகப் பெருமானின் வடிவை '*ஆறுமுகங்கள், கடம்பமாலை தாங்கிய பன்னிரு தோள்கள்; தாமரை மலர் போன்ற இரு தாள்கள், கையில் கூர்கொண்ட ஒரு வேல், தாங்குகின்ற பெருமையைப் பெற்ற மயில் கோழிக் கொடி*' என்று வருணித்துள்ளார்.

இதேபோல இவர் திருவெற்றியூரிலுள்ள ஈசுவரனும் (புற்றீசர்), ஈசுவரியும் (வடிவுடை மாணிக்கவல்லி) தனக்கு அருள் புரிந்ததை மிகத் தெளிவாக எண்ணற்ற அருட்பாக்களால் பாடியுள்ளார். இப்படி இவர் திருவொற்றியூரிலுள்ள ஈசுவரனுக்காகவும், ஈசுவரிக்காகவும் பாடிய பாடல்களின் தொகுதிதான், இவர் பாடிய பாடலின் ஆறு திருமுறைகளில் இரண்டாவது திருமுறையாகத் தொகுக்கப் பட்டுள்ளன. இதில் சிறப்பாகக் குறிக்கப்பட வேண்டியது என்னவென்றால் ஒருமுறை இந்த வடிவுடை மாணிக்கவல்லி அம்மையார் அவர்கள் பசியோடு வீட்டுத் திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்த இராமலிங்கரை எழுப்பி நெய்ப் பொங்கல் சோறு வயிறு நிறைய உண்ணுவதற்காக வழங்கியதாக இவரே குறிக்கின்றார். இதேபோல், இவருடைய அருட்பாக்களில் சிவபெருமானே நேரில் வந்து இவர் உண்ணுவதற்காக 'தெள்ளமுதம்' வழங்கியதாகக் குறிப்பிடுகின்றார்.

**பல கடவுள்களைப் பார்த்தும்கூட சோதி வழிபாட்டைக் கூறிய தவறு:**

ஆனால், இப்படியெல்லாம் பல கடவுள்களை நேரில் பார்த்த இவர் தமது கடைசிக் காலத்தில் உருவமே இல்லாத அருட்பெருஞ்சோதிதான், அருட்பெருஞ்சுடர்தான், விளக்கொளிதான், கற்பூரச் சுடரொளிதான் ... கடவுளென்று கூறிச் சென்று விட்டார். இதனால், திருத்தணிகை மலையிலும், திருவொற்றியூரிலும், சிதம்பரம் சிவபெருமானின் திருநடனப் பெரிய

கோயிலிலும் இவருக்குக் கிடைத்த கடவுட்காட்சிகள் கதைகளாக, கற்பனைகளாக, பயனற்றவைகளாகப் போய்விட்டன. இப்படி, இவர் கடவுள்களை உருவத்தோடு நேரில் கண்டு பழகி உணர்ந்தும் கூட உருவ வழிபாடு தேவையில்லை என்பது போல அருட்பெருஞ்சோதி வழிபாடு என்ற ஒரே ஒரு வழிபாட்டை மட்டும் வலியுறுத்திச் சென்று விட்டார்.

இவர் இப்படித் தமது கடைசிக் காலத்தில் ஒரு குழப்ப வாதத்தை உருவாக்கி விட்டுச் சென்றிட்ட காரணத்தினுல்தான் இவருடைய போதனையோ, சாதனையோ, வாழ்வியலோ தமிழகத்திற்குள் கூட முறையான, நிறையான வளர்ச்சியைப் பெற முடியவில்லை. இவரைப் பின்பற்றுகிறவர்களும் வறட்டு வேதாந்திகளாகவும், வெறும் பாராயணப் பித்தர்களாகவும், சன்மார்க்கச் சங்க நிறுவன நிர்வாகக் கட்டமைப்போ, ஒழுங்கமைப்போ இல்லாதவர்களாகவும் இருக்கிறுர்கள்.

## 5. பரமஅம்சரும் அத்வைதம் பற்றிக் கூறிய தவறு:

மேற்படி இராமலிங்கரைப் போலவே இராமகிருட்டிணப் பரமஅம்சரும் கல்கத்தாவில் தட்சிணேசுவரத்தில் உள்ள காளி கோயிலில் காளியை நேரில் பார்த்துப் பழகியும் கூடத் தமது கடைசி காலத்தில் ஆரிய சமாசம், பிரம்ம சமாசம் ... முதலியவற்றின் கருத்தோட்டங்களுக்கேற்ப அருவுருவங்களை வழிபடும் அத்வைதக் கருத்துக்களைக் கூறிச் சென்றிட்டார். அதாவது, உருவத்தோடும், உடலோடும், உயிரோடும், உணர்வோடும் நேரில் தோன்றித் தன்னேடு பழகிய காளிதேவியையே மறந்தும் துறந்தும் மறைத்தும் அத்வைதக் கருத்துக்களைக் கூறிச் சென்று விட்டார். இதனுல், அவர் வழிபட்ட காளிதேவி கோயிலும், தாந்தரீகப் பூசைகள் பல செய்து சித்தி பெற்ற தட்சிணேசுவரம் பஞ்சவடியும் வரலாற்றுச் சிறப்பையோ, அருளுலகச் சிறப்பையோ, மத முதன்மையோ பெற முடியாமல் போய்விட்டன. இவர் பெயரால் உலகெங்கும் எண்ணற்ற நிறுவனங்கள் தோன்றியும் கூட ஆயிரமாயிரம் துறவிகள் நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டும் கூட இவர் போல் ஒருவர் கூட காளிதேவியைக் காண முடியவில்லை, அருளூற்ருக மாற முடியவில்லை.

## 6. இருவரின் பத்தர்களும் பெறும் தோல்வி:

இராமலிங்க அடிகளாரின் பத்தர்களாக ஆயிரமாயிரம் பேர் ஒரு நூற்றுண்டுக்கு மேல் வாழ்ந்தும் கூட ஒருவர் கூட இராமலிங்க அடிகளைப் போல் கடவுளை நேரில் பார்க்கும் தகுதியைப் பெறவில்லை. இதே நிலைதான் இராமகிருட்டிணரின் பெயரால் ஒரு நூற்றுண்டுக்கு மேல் ஆயிரமாயிரம் துறவிகள் வாழ்ந்தும் கூட ஒருவர் கூட காளிதேவியைக் காண முடியவில்லை.

## இத் தோல்வியைச் சரி செய்யும் முறை:

இம்மாபெரும் தோல்வி இவ்விருவருக்கும் ஏன் ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது? எதற்காக ஏற்பட்டது? எவ்வாறு ஏற்பட்டது? எவரெவரால் ஏற்படுத்தப் பட்டது? இத்தோல்வியை வெற்றியாக்க முடியுமா? அதற்கு என்னென்ன செய்ய வேண்டும்? அல்லது நாத்திகர்கள் கூறுவது போல் மேற்படி இருவரும் கற்பனை வாதிகளா? அல்லது கடவுள் பத்தர்களா? ஒரு நூற்றுண்டு காலமாகியும் வாரிசுகளை உருவாக்க முடியாது செத்துப் போன சொத்தை வித்துக்களையா தத்துவமாக வழங்கிச் சென்றுர்கள் மேற்படி இருவரும்? ... என்று எண்ணற்ற விஞக்களை கடலலை போல் தொடர்ந்து எழுப்பிச் சிந்தித்து விடைகாண முடியாமல் ஏங்கித் தவித்து, அலைந்து திரிந்து, சிந்தை வெந்து, நெஞ்சம் நைந்து, செய்வதறியாது திகைத்து நிற்கும் எண்ணற்ற மெய்யன்பர்களின் இருள் நிறைந்த அருளுலக வாழ்வில் பேரொளிப் பிழம்பாய் மெய்ஞ்ஞானச் சோதியாக பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதம் வெளித் தோன்றியுள்ளது. அதாவது, மெய்யான இந்துமதமெனும் ஆதவனை மூடியிருந்த கார் மேகங்களைப் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் கருவூரூரின் அருட்பணி எனும் காற்று அகற்றி விட்டது.

## 7. மெய்யான இந்துமதத்தால்தான் அனைவரும் அருள் பெறமுடியும்:

கார்மேகங்களால் மூடப்பட்டிருந்த மெய்யான இந்துமதமெனும் கதிரவன் ஒளி எங்கும் பரவத் தொடங்கி யிருக்கிறது. இனியாவது உடனடியாக மெய்யன்பர்கள் அருளுலக அநுபவங்களைப் பெற்றிட வாய்மைமிகு தெய்வத் தமிழால் மெய்யான இந்துமதத்தைச் செயலாக்கிட குருதேவர் ஞானச்சாரியார், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,

அருளாட்சி நாயகம், இந்துமதத் தந்தை, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்களையும்; அவர்கள் உருவாக்கியுள்ள பல்லாயிரக் கணக்கான சித்தரடியான்களையும், சித்தரடியாள்களையும், சித்தரடியார்களையும், நூற்றுக்கணக்கான அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்களையும், அருட்கோட்டங்களாக ஆக்கியுள்ள சுடுகாடு, இடுகாடு, புதைகாடு ... முதலிய 18 வகைக் காடுகளையும், புதிதாக நிறுவனம் செய்துள்ள 40க்கும் மேற்பட்ட கருவறைகளையும், உலகெங்கும் புத்துயிர்ப்புச் செய்துள்ள எண்ணற்ற அனைத்து மத வழிபாட்டு நிலையங்களையும் நன்கு பயன்படுத்தி உய்வு பெற வாரீர்! வாரீர்! வாரீர்!

## 8. இருவரையும் இணைத்து வழிபடுதல் வெற்றி தரும்:

தென்னாட்டு இராமலிங்கரை வடநாட்டுக்கும், வடநாடு கடந்த வெளிநாட்டுக்கும் கொண்டு போவதென்பது எளிய காரியமல்ல. எனவே, வெளிநாடுகளிலும் உள்நாட்டின் பல பகுதிகளிலும் நன்கு அறிமுகமாகியிருக்கின்ற இராமகிருட்டிணரை தமிழகம் முழுவதும் அறிமுகப்படுத்தி அருளுலக மலர்ச்சியின் வளவளர்ச்சிப் பணிக்கு உறுதுணையாக்கிடலாம். அதாவது, காளிதேவியின் சித்தியாளரான அருளூற்று நிலையினராக வாழ்ந்த இராமகிருட்டிணப் பரமஅம்சரின் வாழ்வியல்களையும் போதனைகளையும், சாதனைகளையும்; நமது வடலூர் அருட்பெருஞ்சோதி வள்ளல் பெருமானின் முருகபத்திப் பாடல்களிலும், வடிவுடைய மாணிக்கவல்லிப் பாடல்களிலும், சிவபெருமான் மீது பாடப்பட்ட பத்திப் பாடல்களிலும் இணைத்து வணங்க வேண்டும். அப்பொழுதுதான் இருவரும் அருளுலகின் சூரிய சந்திரர்களாக விளங்கி அருளொளிப் பயனை மானுடர் பெறச் செய்திட முடியும்.

அதாவது, வடலூர் இராமலிங்க அடிகளாரையும், வடநாட்டு இராமகிருட்டிணப் பரமஅம்சரையும் வறட்டு வேதாந்திகளாகவோ, கதைக்குதவாத கற்பனைவாதிகளாகவோ சித்தரித்துக் காட்டும் அத்வைத மாயைகளிலிருந்து, அதாவது வடஆரிய வேதமத மாயைகளிலிருந்து விடுவித்திடல் வேண்டும். இதற்காக, **“இவர்கள் இருவரும் பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதப்படி உருவ வழிபாட்டைச்**

**செய்தே சத்தி, சித்தி, முத்தி ஆகியவற்றைப் பெற்றார்கள்! பெற்றார்கள்!! பெற்றார்கள்!!!"** என்ற பேருண்மையைப் படிப்பறிவில்லாத பாமர மக்களுக்கு விளக்கி யுரைத்திடல் வேண்டும்.

அப்பொழுதுதான் இத் திருநாட்டு மக்கள் சாதிவெறி, மதவெறி, தீண்டாமைக் கொடுமை, ஏற்றத் தாழ்வுக் கொடுமை, நாத்திக அநாகரீகம், பகுத்தறிவு மோசடி, நாகரீக மோகம் ... முதலிய தீமைகளிலிருந்து விடுவிக்கப் படுவார்கள்! விடுவிக்கப் படுவார்கள்!! விடுவிக்கப் படுவார்கள்!!! காப்பாற்றப் படுவார்கள்! காப்பாற்றப் படுவார்கள்!! காப்பாற்றப் படுவார்கள்!!! அதாவது, ***இராமலிங்கரும், இராமகிருட்டிணரும் சித்தர் நெறிச் செல்வர்களே***! என்ற பேருண்மைதான் அனைத்து வெறிகளையும் அகற்றும்! அகற்றும்!! அகற்றும்!!!

**//மூலம்: 1986 பிப்ரவரி, மார்ச்சில் வெளியான குருதேவர் அறிக்கை 26, 27 ஆகியவற்றிலிருந்து தொகுக்கப் பட்டது.//**

***கேள்வி:-*** **"உருவ வழிபாடு உயர்ந்த பக்குவ நிலையைத் தராது. மிகச் சாதாரண மனிதர்களுக்குத்தான் உருவ வழிபாடு தேவை. ஞானிகளுக்கு உருவ வழிபாடு தேவையில்லை....." என்ற கருத்துப் போக்குச் சரிதானா? பயனுடையதா?**

***பதில்:-*** இந்த நாட்டில் இந்துமதத்தின் தந்தையாக, தாயாக, சிற்பியாக, ஆரம்பமாக, உயிராக... இருக்கின்ற சித்தர் நெறியைத் தவறான ஆரியமாயைக் கருத்துக்கள் மறைத்தும், குறைத்தும், ஒதுக்கியும், வெறுத்தும், மறுத்தும்... தொடர்ந்து செயல்பட்டதன் விளைவுதான் உருவ வழிபாட்டுக்கு எதிராகப் பிறந்துள்ள கருத்துக்கள். உருவ வழிபாட்டால்தான் பத்தி, சத்தி, சித்தி, முத்தி நிலைகளில் தேர்ச்சி பெற முடியும்! முடியும்! முடியும்!

அருள் அணுக்கள் தேக்கி வைக்கப்பட்டுள்ள அணைக்கட்டுக்களே உருவங்கள். அவை தத்துவ விளக்கங்கள், வரலாற்றுச் சின்னங்கள், கலைக் கருவூலங்கள், அருள்நீர்த் துறையின் இறங்கு துறைகள். உணர்க!

# அன்புள்ள சேவுகனுக்கு!

# வள்ளலாரைத் தமிழர்கள் அனைவரும் மதித்து ஏற்காத நிலை

*அன்புச்சேவுக!*

1. நீ, இந்தியத் துணைக்கண்டத்து ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் ஒட்டுமொத்த மாநாட்டில் கலந்து கொள்ள தில்லி மாநகர் சென்றிருக்கிறாய். உன் அனுபவம் தெற்கேயும் வடக்கேயும் ஒப்புநோக்கச் செய்திடும். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களிடையே வறுமையும், பற்றுக்குறையும், ஏக்க நிலையும், நோய் நிலையும் ஆதிக்கம் செலுத்தும் பொழுது; புற வாழ்க்கையைப் போல்தான் அக வாழ்க்கையும் இருண்டிருக்கும். எனவே, வழிகாட்டும் சுடராய்! கலங்கரை விளக்கமாய்! அகவிருள் அகற்றும் அருட்பெருஞ் சோதியாய்! விளங்கவேண்டிய ஆசிரியப் பெருமக்கள் முற்றிலும் அணைக்கப்பட்ட கரிக்கட்டைகளாக இருப்பதைக் காணலாம். இதற்குமேல், கட்டிடமே இல்லாத பள்ளிகள். ஆசிரியரே இல்லாத பள்ளிகள், ஓராசிரியர் பள்ளிகள்... என்று பெயரளவில் உள்ள பள்ளிகளுக்கும்; அப் பள்ளிவாழ் மாணவர்களுக்கும் இடையேயுள்ள உறவுகளையும் உரிமைகளையும் ஆராய்ந்து புரிந்து கொள்.

## 2. இராமலிங்கருக்கும், இராமகிருட்டிணருக்கும் சித்தியான கடவுள்கள்:

நண்ப! தெற்கே, பள்ளிக்கூடத்துக்கே போகாத வடலூர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் அருட்பாக் கொடைவள்ளல், இராமலிங்க அடிகளாரையும் கல்கத்தா காளிகோயில் பூசாறி இராமகிருட்டிணப் பரமஅம்சரையும் ஒப்பிட்டு நோக்கி ஆய்வு செய்திடு. இரண்டு பேருமே ஏறத்தாழ எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளாதவர்கள்தான். இரண்டு பேருக்குமே கடவுள்கள் நேரில் தோன்றி வரமளித்தார்கள். தென்னாட்டு இராமலிங்க அடிகளாருக்கு முறையே சிதம்பரத்தில் நடனமிடும் கூத்தர்ப் பெருமான், திருத்தணிகைவாழ் முருகன், திருவொற்றியூர் வடிவுடைய மாணிக்கவல்லி... முதலியோர் நேரில் தோன்றி அனைத்து வகையான

அருளையும் வழங்கினார்கள். ஆனால், வடநாட்டு இராமகிருட்டிணப் பரமஅம்சருக்குக் காளிதேவி மட்டுமே நேரில் தோன்றி அருள் வழங்கினாள்.



### 3. இருவரும் ஏற்ற உணவுப் பழக்கம்:

இராமலிங்க அடிகளார் பிறவியிலேயே மரக்கறி உணவு மட்டுமே உண்பவர்- காலப்போக்கில் பயிற்சித் தேர்ச்சியாலும், முயற்சி முதிர்ச்சியாலும் உண்ணுவன பருகுவன அனைத்தையும் நிறுத்தி அருவுருவ அமுதத் தேகம் பெற்றார். ஆனால் இராமகிருட்டிண பரமஅம்சரோ பிறவியிலேயே மீனும், கறியும் உண்ணும் பூசாறியாகப் பிறந்தவர், கடைசி வரை காளிக்கும், சுடுகாட்டுப் புதைகாட்டுத் தெய்வங்களுக்கும், தாந்தரீகப் பூசைகளுக்கும் படையலாகப் பயன்படுத்திய இறைச்சியையும் மீனையும் உணவாக உண்டே உலகியலாகச் சத்திதேவியின் வடிவமாக வாழ்ந்தவர்.

### 4. இருவரின் வாழ்க்கை நிறைவு:

இராமலிங்க அடிகளார் ஈ, எறும்பு மொய்க்காத, நோய் நெருங்காத பொன்வண்ண ஞான தேகம் பெற்றிட்டார். அருட்பெருஞ் சோதியாகி மறைவான இறையோடு எங்கும் நிறைந்திட்டார். இராமகிருட்டிணரோ உலகியலாக மனித தேகத்தோடு வாழ்ந்து மாண்டிட்டார்.

### 5. இருவரின் உலக அறிமுக வளர்ச்சிநிலை:

இந்த, இருவேறு அருளாளர்களையும்; தென்னாடு வடநாடு என்ற இருபெரும் நாட்டுப் பிரிவுக்கு இலக்காகக் கொண்டு விளக்கம் தேடினால்; இராமகிருட்டிணர், உலகம் முழுவதும் அறியப்பட்ட அருளாளராக நிறுவன நிர்வாக அமைப்புக்களோடு வளர்ந்துள்ளார். ஆனால், இராமலிங்க அடிகளாரோ தென்னாடு எனும் நான்கு மாநிலங்களில் மூன்று மாநிலத்தாருக்கு யாரென்றே தெரியாமலும்; தமிழ்நாட்டிற்குள் உள்ள

(ஏறத்தாழ) இருபது மாவட்டத்தார்களில் இரண்டு மூன்று மாவட்டத்தார்களுக்கு மட்டுமே ஓரளவு தெரிந்தவராய் இருக்கின்ற இரங்கத் தக்க நிலையையும் எண்ணிப் பார்த்திடுக. அப்பொழுதுதான், தமிழர்கள் எப்பொழுதுமே, தங்களுடைய மொழியையோ! இனத்தையோ! நாட்டையோ! பண்பாட்டையோ! நாகரீகத்தையோ! மதிப்பதில்லை! மதிப்பதில்லை!! மதிப்பதில்லை!!! மதிப்பதேயில்லை! விரும்புவதில்லை! விரும்புவதில்லை!! விரும்புவதில்லை!!! விரும்புவதேயில்லை என்ற பேருண்மை விளங்கிடும்.

அதாவது, எப்படியோ **தமிழர்களுக்குக் கூலிச் சிந்தையும் அடிமை நெஞ்சமும் ஏற்பட்டுத் "*தங்களுக்கு அன்னியர்கள்தான் தலைவர்களாக இருக்க வேண்டும்*" என்ற கருத்தும் விருப்பமும் ஏற்பட்டுவிட்டது. இதைத் திருத்த முற்படுபவர்களே நாம்; என்ற உணர்வில் செயல்படு பிறரைச் செயல்படுத்து.**

அன்பு

**இந்து மதத்தந்தை, குருமகா சன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

**மூலம்: 26-2-1986இல் வெளியான குருதேவர் அறிக்கை 26இலிருந்து எடுத்தது.**

இராமலிங்க அடிகளார் மாணிக்கவாசகருக்குச் சிறப்பாக மூன்று பாடல்கள் பாடியுள்ளார். அவற்றுள் அனைவரும் பாடி மகிழ்வது:

**"வான் கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை**
**நான் கலந்து பாடுங்கால் நற் கருப்பஞ் சாற்றினிலே**
**தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித்தீஞ் சுவை கலந்தென்**
**ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாம லினிப்பதுவே"**

*(திருவருட்பா- இராமலிங்க அடிகளார்)*

[வள்ளலார் தமக்கு முன்னே வாழ்ந்திட்ட தமிழக அருளாளார்களைப் பின்பற்றியே செயல்பட்டார் என்பதற்குச் சான்றாக அமையும் பாடல்]

# இராமகிருட்டிணரியம்

# RAMAKRISHNARISM

**மெய்யான இந்துமதம்** [The True INDUISM] என்பதுதான் காலப் போக்கில் பல்வேறு அன்னியர்களின் அயராத கலப்பட முயற்சியால் திரிந்தும், சிதைந்தும், மாறியும், வேறுபட்டும், புதியன பல ஏற்றுத்தான் **பொய்யான ஹிந்துமதம்** [The False Hinduism] உருவாயிற்று. இதனால்தான், பல தத்துவார்த்தமான கற்பனைகள் [Philosophical Imaginations] தோன்றி விட்டன. இந்தக் கற்பனைகளே பயனற்ற சடங்குகளையும் [Useless Rituals], பொருளற்ற பழக்க வழக்கங்களையும் [Meaningless Customs and Manners] உருவாக்கி விட்டன.

இதனால்தான், உருவ வழிபாடு [Idol Worship], மதச் சின்னங்களை அணிதல் [Religious Symbols], மத இலக்கியங்களையும் வரலாறுகளையும் புறக்கணித்தல் [discording the Religious Literature and History], அனைத்து மொழிகளுக்கும் தெய்வீக சத்தி உண்டு என்ற பேருண்மையைக் கொன்றிடும் வண்ணம் சமசுக்கிருத மொழியை மட்டும் பூசைக்குரிய மொழியாக வற்புறுத்துதல் [Giving religious importance and prominence to the Sanskrit Language as a language of Poojas by murdering or degrading the universal religious fact that all the Languages have religious importance and Divine Power.] ... முதலிய தவறுகள் தோன்றி விட்டன.

இவற்றால்தான் இந்துமதத்தின் மூலம் அருளை அநுபவப் பொருளாகப் பெறுவதும் அருளுலக அநுபவங்களை வழங்கக் கூடிய மதத் தலைவர்கள் தோன்றுவதும், அறிவியல் பூர்வமாக இந்துமதத்தைப் புரிந்து கொள்ள இயலாமல் போனதும் இந்துமதத்தால் பயனில்லை யென்று தவறாக எண்ணுபவர் வேற்று மதங்களில் சேருவதும் நிகழ்ந்தன.

அப்படிப்பட்ட காலக்கட்டத்தில்தான் இராமகிருட்டிணர் உருவ வழிபாட்டால் காளியை (பவதாரிணி) நேரில் கண்டு தன்னை அருளூற்றுக்கிக் கொண்டார். இரவு பகலாகச் சுடுகாட்டிலும் புதைகாட்டிலும் அமர்ந்து அருளுலக அநுபவங்களைப் பெற்றார். அவரது மெய்யான இந்துமத அநுபவம்தான், அவரை அனைத்து மதங்களையும் மொழிகளையும் சமமாக ஏற்றுக் கொள்ளும் **சித்தர் நெறிச் செல்வராக, ஞானசித்தராக, வேதசித்தராக, நவநாத சித்தராக** முதிர்ச்சி பெறச் செய்தது அருள்மிகு இராமகிருட்டிண பரமஅம்சரை. ஆனால், அவர் பெயரால் சனாதன தருமமும், வடஆரிய வேதமதமும், சமசுக்கிருத மொழியும், பிருமண உயர்வும், கற்பனையான பிரம்மஞான வாதமும் ... வெறியாக வளர்க்கப்படும் நிலைகள் வளர்ந்து விட்டன.

இவற்றால் மீண்டும் போலியான, பொய்யான ஹிந்துமதம் வளருகிறது. அதனால், தேவையில்லாத மத மாற்றங்களும், மதச் சண்டைகளும், சாதி வெறிகளும், ஏற்றத் தாழ்வுகளும், தீண்டாமைக் கொடுமைகளும் ... வளர்ந்து விட்டன. இவற்றிற்குக் காரணம் பிருமண ஆதிக்கமும், வடஆரிய வேதமதமும், சமசுக்கிருத மொழி இலக்கியங்களும், வறட்டுத் தனமான தத்துவ வெறியும்தான். எனவே, மீண்டும் **நாயன்மார்கள், ஆழ்வார்கள், அடிகளார்கள் ... வழியில் வந்த இராமகிருட்டிணரின் பத்தி நெறி மதமான சித்தர் நெறி எனும் மெய்யான இந்துமதம் பிழைக்க வேண்டும், கிளைத்துத் தழைக்க வேண்டும்.** அதுதான், இந்துமத மறுமலர்ச்சியைத் தரும்.

எனவேதான், 1986ஆம் ஆண்டின் துவக்க மலராக, இந்த ஆண்டின் துவக்க மலராக, இந்த ஆண்டின் முதல் “குருதேவராக’ வெளிவரும் சனவரி மாத அறிக்கை ‘இராமகிருட்டிணப் பரம அம்சரின் சிறப்பு மலராக’ வெளிவருகிறது. இவரை **ஞானசித்தர், வேதசித்தர், நவநாத சித்தர், சித்தர்நெறிச் செல்வர், மெய்யான இந்துமத ஆச்சாரியார், காளிதேவியின் அருட்செல்வர், இந்துமத மறுமலர்ச்சிச் சிற்பிகளுள் ஒருவர்** ... என்று அருளுலகச் சிறப்புக்களை வழங்குகிறோம்.

அதாவது, இன்றைய குவலய குருபீடம், ஞானாச்சாரியார், குருதேவர், இந்துமதத் தந்தை, அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இராசிவட்ட நிறைவுடையார், நல்லிலக்கண மார்புடையார், ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, அருளாட்சி நாயகம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் இராமகிருட்டிணர் வாழ்ந்த மெய்யான இந்துமத வாழ்வும், அவர் போதித்த மெய்யான இந்துமதத் தத்துவமும் ஒருங்கிணைந்த **இராமகிருட்டிணரியம்** [அல்லது இராமகிருட்டிணரியல் = The Ramakrishnarism] மீண்டும் உடனடியாக இந்தியா முழுவதும் முளைத்துக் கிளைத்துத் தழைத்துச் செழித்து வளர வேண்டும் என்று அறிவிப்புச் செய்கிறார். இதனைப் புரிந்து அனைவரும் மெய்யான இராமகிருட்டிணச் சாதனைகளை உணர்ந்தும் உணர்த்தியும் செயல்படலே **இந்துமத மறுமலர்ச்சிப் பணிகளை** அணி செய்யும்.

ஓம் திருச்சிற்றம்பலம்

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**

**நிறுவன நிர்வாகக் குழுக்கள்**

**23.2.1986**

## காளி காயந்திரி மந்தரம்

**"ஓம் காளி தேவியே காயமே வித்தைகளின் விளைநிலமாக்கிடுக!**
**தாயே நீயே தீயாகி மகிழ்ந்திடுக! அருளிடுக!**
**என்னைத் துன்புறுத்துவனவற்றைப் பிறப்பற்றனவாக்கிடுக!**
**அனாதி நீயே ஆதி நீயே பாதி நீயே மீதி நீயே**
**வாழ்த்துகிறோம் வணங்குகிறோம் ஏற்றிடுக காத்திடுக"**

இக் காயந்திரி மந்தரமே, இந்தியாவில் உள்ள அனைத்து மொழிகளிலும் சிலசில திருத்தங்களைப் பெற்றும்; ஒருசில சொற்களை விடுத்தும்; தொடுத்தும்; அளவில் சுருங்கியும் வாழுகின்றது. *'இராமகிருட்டிணப் பரமஅம்சர் எனப்படும் வங்கத் திராவிடன்'* ஓதிய காயந்திரி மந்தரம்

தமிழில் உள்ள இந்தக் காயந்திரி மந்தரத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் என்று இ.ம.இ.யைக் கி.பி. 1772இல் தை மாதத்தில் தைப்பூச நன்னாளில் துவக்கிய சித்தர் கருவூரார் வழி வந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளை அவர்கள் குறிக்கின்றார்.

இந்தச் சித்தர் ஏளனம்பட்டியாரே 'மகாகவி காளிதாசனும், பட்டி விக்கிரமாதித்தனும், தமிழக மூவேந்தர்களும் இந்தக் காளி காயந்திரி மந்தரம் கூறியே சித்திகளைப் பெற்றனர் என்ற செய்தி குருபாரம்பரியத்திலும், அரச பாரம்பரியத்திலும் இருப்பதாகக்' குறிக்கிறார். எனவே இருநூற்று நாற்பத்து மூன்று (243) வகைச் சத்திகளுக்கும் இக் காயந்திரி மந்தரம் உயிர் போன்றது. தீயனவற்றை அழிக்கும் வீரம், தீரம், உரம், தரம், ஆற்றல் ... முதலியன தரவல்லது இம்மந்தரம்.

**இதன் மூலம்: 26-1-1986இல் வெளியான குருதேவர் அறிக்கை 25 மற்றும் கையெழுத்துப் பிறதி நகலாக சித்தரடியார் சுந்தரானந்தாவின் கையெழுத்தில் கிடைத்த நகல்.**

***"... நான், கேட்டும், படித்தும், பார்த்தும், தவம் நோற்றும், ஆய்வுகள் நிகழ்த்தியும், உய்த்துணர்ந்தும் சேர்த்திட்ட கருத்துக்களை, கொள்கைகளை, நெறிகளை, உண்மைகளை, முடிவுகளை வெளியில் செயலாக்கிக் காட்டா விட்டாலும்; எழுத்து வடிவிலாவது தெளிவாக வெளியிட்டு விட்டுச் சென்றாக வேண்டும். இல்லாவிட்டால் "சித்தர்" ஒருவர் இருபதாம் நூற்றாண்டில் கலிகாலத்தில் தோன்றிப் பயனுள்ள ஏதும் செய்யாமல் சென்றிட்ட பழி ஏற்பட்டே தீரும், அப்பழி, தனிமனிதனான என்னை மட்டும் சேராது; என் காலத்தில், நான், முழுமையாகச் செயல்பட முடியாமல் செய்திட்ட மக்கள் அனைவருக்கும் அப்பழி வந்து சேர்ந்தே தீரும் ..."***

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் வாசகம்**

# கோசலையாற்றங்கரையில் குவலய குருபீடத்தில் ஒரு இராமகிருட்டிண மடம்

குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்கள் செங்கை மாவட்டம் செங்குன்றத்தை அடுத்து காரனோடை கிராமத்தில் கோசலையாற்றங்கரையில் நிறுவும் குவலய குருபீடத்தில், சித்தர் நெறிக் கருகுலத்தில், 1008 கருவறையார் சிவாலயத்தில், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானத்தில், பதினெண் வெட்டவெளிக் கருவறை கொண்ட அருட்கோட்டத்தில், மெய்யான இந்துமதத் தலைமைப் பீடத்தில், சனீசுவரதேவன் கோவிலில் ... ஓர் இராமகிருட்டிண மடம் துவக்குகிறார்.

இந்த குவலய குருபீட இராமகிருட்டிண மடம் ஏற்கனவே உள்ள இராமகிருட்டிண மடங்களின் துறவற நெறியை ஏற்காது; கட்டுப்பாடுகள் மிகுந்த செயற்கைநிலைச் சடங்கியல் போக்கைப் பின்பற்றாது; இயந்திர மயமான நிர்வாக முறைகளைக் கையாளாது; தனிமனித உணர்வுகளுக்கும் திறமைகளுக்கும் உரிய வாய்ப்பு வசதிகளை வழங்காமல் ஒருமித்த மடத்தின் தலைமைப்படியே செயல்படும் நிர்வாகப் போக்கு இருக்காது; விரும்புகிற வட்டாரங்களில் எல்லாம் அந்தந்த சூழலுக்கும், வசதி வாய்ப்புகளுக்கும் ஏற்பக் கோயில் வழிபாடுகளை ஏற்கும் தன்னுரிமைப் போக்கு வளர்க்கும்; மெய்யான இந்துமதப்படி அனைத்து வகையான கொள்கைகளும் குறிக்கோள்களும், நடைமுறைகளும், பூசாவிதிகளும், சடங்கியல்களும் கையாளப்படும்;

குறிப்பாக மெய்யான இந்துமதத்திற்குரிய நீராட்டு முறைகள், குருதிப் பலிகள், பூ அலங்காரம், தேங்காய் பழம் வெற்றிலைபாக்கு ... படைத்தல், இறைச்சி உணவு படையல், பலவகைப் பணியாரங்களும், பலகாரங்களும் படைத்தல், சாம்பிராணி தூபங்களும், கற்பூரத் தீபச் சுடர்களும் பயன்படுத்துதல் ... முதலிய குருபாரம்பரிய மரபுகள், குருவாக்குகள்,

குருவாக்கியங்கள், குருவாசகங்கள், கருவாக்குகள், கருவாக்கியங்கள், கருவாசகங்கள், தருவாக்குகள், தருவாக்கியங்கள், தருவாசகங்கள், திருவாக்குகள், திருவாக்கியங்கள், திருவாசகங்கள் ஆகியவற்றின்படி நிகழ்த்தும்.

இவ்வாறு காளிதேவியை நேரில் கண்டு அருளூற்றுக மாறிய இராமகிருட்டிணர் அவர்கள், காளிதேவியை பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதப்படி பூசை செய்துதான் சித்தி பெற்றுர் என்ற பேருண்மையை விளக்கும் வண்ணமே கோசலையாற்று இராமகிருட்டிண மடத்தில் கருவறையில் அனைத்து வகையான சடங்குகளும், சம்பிறதாயங்களும் கடைப்பிடிக்கப்படும். பத்தர்கள் கொண்டுவரும் தேங்காய் உடைக்கப்பட்டு ஊதுவத்தி, கற்பூரம் ஏற்றப்பட்டு பழம் வெற்றிலைபாக்கு, நெய்வேத்திய பொங்கல், பலகாரங்கள், சமைக்கப்பட்ட பலி உணவுகள் ... முதலியவைகள் படைக்கப்பட்டு பூசைகள் நடக்கும். வருகின்றவர்களுக்கு திருநீறு, குங்குமம், மஞ்சள், சந்தனம், சாந்து, ... முதலிய பொருள்கள் வழங்கப்படும். பத்தர்கள் வழங்குகின்ற காணிக்கைகள், நன்கொடைகள், அன்பளிப்புகள், ஏந்துகள் முதலிய அனைத்தும் ஏற்கப்படும்.

இல்லறத்திற்குப் பிறகு துறவறம் ஏற்கின்ற துறவிகள் இம்மடத்தில் இடம் பெறுவார்கள். இல்லறத்தையே விரும்பாமல் நேரடியாக துறவறம் ஏற்கின்ற துறவிகள் கருகுலப் பயிற்சிகளையும், மதுரை மாவட்டம், மேலூர்-கொட்டாம்பட்டி காரியேந்தல்பட்டி சித்தர் மாநகரில் அருளுலகப் பயிற்சிகளையும் பெற்று அருளாளராவதற்கு வழிகாட்டப் படுவார்கள்.

இராமகிருட்டிணர் தாந்தரீகப் பூசைகளின் மூலம் அருட்சத்திகளைப் பெற்றுர் என்ற பேருண்மையும்; சுடுகாடுகளிலும், புதைகாடுகளிலும் இரவு பகலாக அமர்ந்து சுடலையாண்டி-ஆண்டிச்சி; சுடலை ஈசுவரன்-ஈசுவரி, சுடலைக்காரன், சுடலைக்காரி, சுடலை முனீசுவரன் முனீசுவரி, சுடலை மாடன் மாடத்தி, சுடலை இடாகினி, இடாகன், சுடலை மோகினி மோகன் ... எனப்படும் 48 வகையான வழிபடு நிலையினர்களிடமிருந்தும் அருட்சத்தி சித்திகளைப் பெற்றுர் என்ற பேருண்மையும் அடிப்படையாகக் கொண்டே இராமகிருட்டிண மடத்து அருளுரைகளும், வெளியீடுகளும், பயிற்சிகளும் அமையும்! அமையும்! அமையும்! எனவே, இந்தக்

கோசலையாற்றுச் சித்தர் நெறிக் கருகுலத்தின் இராமகிருட்டிண மடத்தை மற்ற இராமகிருட்டிண மடங்களோடு ஒப்பிட வேண்டாம்.

பதினெண்சித்தர் பீடாதிபதி கோசலையாற்றங்கரையில் அமைக்கும் இராமகிருட்டிண மடத்தில் அனைத்து வித மொழிகளும் பூசாமொழிகளாக ஏற்கப்படும், சமசுக்கிருத மொழி வற்புறுத்தப்பட மாட்டாது.

அதாவது இன்றைக்கு நாட்டு நடப்பில் உள்ள அனைத்து இராமகிருட்டிண மடத்திலும், விவேகானந்தர் கல்வி நிலையங்களிலும் சமசுகிருதத்தை கட்டாயப் பாடமாக்கி யிருக்கிறார்கள். சமசுக்கிருத மொழிதான் தெய்வீக மொழி என்ற மாயையை ஏற்படுத்தி வருகிறார்கள். இவற்றிற்கு மாறாக அவரவர் தத்தம் தாய்மொழியில் பூசைகள் செய்யலாம் என்ற கருத்து வலியுறுத்தப் படும், செயலாக்கப் படும்.

இன்றுள்ள இராமகிருட்டிண மடங்களில் இராமகிருட்டிண பரம அம்சரின் வரலாறு, வாழ்வியல், சாதனை, போதனை ... முதலியவைகளுக்கு முதலிடம் கொடுக்கப் படுவதில்லை. ஆனால், சமசுக்கிருத வேதங்களுக்கும், உபநிடதங்களுக்கும், அத்வைத தத்துவத்திற்கும் மட்டுமே முதன்மை கொடுக்கப் படுகிறது. இத்தவறு அகற்றப்படும். இராமகிருட்டிணரின் போக்கிலே அனைத்து வகையான கடவுள்களும், தெய்வங்களும், ஆண்டவர்களும், தேவியர்களும் சமாது நிலை எய்திய அமரர்களும் ... **[48 வகை வழிபடு நிலையினர்களும், வழிபாட்டு நிலையங்களும், வெட்டவெளிக் கருவறைகளும்]** பூசை செய்யப் படுவார்கள்! செய்யப் படுவார்கள்! செய்யப் படுவார்கள்!

அதாவது, பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதப்படி அனைத்து வகையான விரதங்களும், விழாக்களும், திருநாள்களும், சடங்குகளும், சம்பிறதாயங்களும், அக்கினிசட்டி, காவடி, பால்குடம் முதலியவை எடுத்தல், நெருப்பு மிதித்தல் ... முதலிய அனைத்து வகையான பழக்க வழக்கங்களும், ஒழுகலாறுகளும், நம்பிக்கைகளும் இந்த இராமகிருட்டிண மடத்தின் மூலம் [கோசலையாற்றங் கரையில் உள்ள] மறுமலர்ச்சி அடையவும் வளவளர்ச்சி அடையவும், எழிச்சிமிகு செழிச்சி யடையவும் செய்யப்படும்! செய்யப்படும்! செய்யப்படும்!

இன்றைய இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், குவலய குருபீடம், அருளாட்சி நாயகம், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறூர் அவர்கள் ***அருள்மிகு தவத்திரு இராமகிருட்டிண பரமஅம்சர் அவர்களை ஞானசித்தர் என்றும், நவநாத சித்தர் என்றும், வேத சித்தர்*** என்றும் அருளுலக ஒப்புதலும்; தாத்தாக்கள் ஆத்தாக்கள் சம்மதமும் பெற்று அறிவிப்புச் செய்துள்ளார். எனவே, இந்தப் பதினெண்சித்தர் பீடத்திற்குரிய கோசலையாற்றங்கரை இராமகிருட்டிண மடத்தில் அருள்மிகு தவத்திரு இராமகிருட்டிண பரமஅம்சர் வழிபாட்டுக்குரிய கருவறை மூலவராக [கடவுள்] அறிவிக்கப் படுகிறார்.

எனவே, புத்த மதத்தவர் புத்தரை வணங்குவது போல், சமண மதத்தில் மகாவீரரை வணங்குவது போல், கிருத்துவ மதத்தில் ஏசுவை வணங்குவது போல் இனிமேல் இந்த கோசலையாற்றங்கரை இராமகிருட்டிண மடத்தில் இராமகிருட்டிண பரமஅம்சர் வணங்கப் படுவார். இதன் அடிப்படையில் இராமகிருட்டிணர் தட்சிணேசுவரத்தில் வணங்கிய காளி கோயிலும் அவர் வாழ்ந்திட்ட இடங்களும் பூசைக்குரிய அருளாற்றல் மிக்க புனிதத் திருத்தலங்களாகக் கருதப்படும். இராமகிருட்டிண பரமஅம்சரின் சிலையை வைத்துப் பூசைகள் செய்யும் மரபு எங்கும் பரப்பப் படுவதற்கு இந்தப் பதினெண்சித்தர் நெறிக்குரிய கோசலையாற்றங்கரை இராமகிருட்டிண மடம் இனிமேல் பாடுபடும்! பாடுபடும்! பாடுபடும்!

எனவே, இராமகிருட்டிணரிடத்தும், விவேகானந்தரிடத்தும், காளிதேவியிடத்தும், தாந்தரீக ஏந்தரீகப் பூசைகளிடத்தும், சுடுகாட்டுப் புதைகாட்டுப் பூசைகள், சாதிமத வெறியில்லாத சமத்துவப் போக்குகள்; மனிதனைக் கடவுளாக்கும் பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமத நடைமுறைகள் முதலியவற்றில் ஆர்வமும், நம்பிக்கையும், ஈடுபாடும் உடையவர்கள் நேரடியாகவோ அஞ்சல் வழியாகவோ தொடர்பு கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மூலம்: 26-9.1986இல் வெளியான குருதேவர் அறிக்கை 33இலிருந்து எடுக்கப்பட்டது.**

***கேள்வி:- வள்ளலாரைப் பழித்துரைத்து எழுதிய போது கொதித்தெழுந்த தாங்கள் அவரின் கொள்கைக்கு அதாவது உயிர்ப்பலி கூடாது என்ற கருத்துக்குப் புறம்பாகச் செயல்படுவது ஏன்? உயிர்களைக் கொல்வது பெரும் பாவமல்லவா? உயிர்ப்பலி தேவையானதா? அவசியமானதா? இதுபற்றித் தங்களின் விளக்கமென்ன?***

பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதத்தின் அடிப்படையும், உள்ளீடும் முடிவும் பலிகள் கொடுத்துத்தான் பூசைகளைத் துவக்க வேண்டும். இறைச்சியுணவுப் படையலைப் படைத்துத்தான் பூசைகளை நிறைவு செய்ய வேண்டும் என்ற முறையான சட்டதிட்ட செயல்நிலை உள்ளது. இதனை மாறியும் மீறியும் மறந்தும் துறந்தும் மறுத்தும் வெறுத்தும் செயல்பட்டிட்டதால்தான் இந்துமத வழிபாட்டு நிலையங்கள் அனைத்தும் பாழடைந்தன, பயனிழந்து நின்றன என்ற பேருண்மையினைப் பத்தாவது பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தங்களது குருபாரம்பரியம், குருவாசகம், குருவாக்கியம்.... முதலியவற்றில் மிகத் தெளிவாகக் குறிக்கின்றார்கள்.

இறைச்சி யுணவு உண்ணாதவனுக்கு முத்தி கிடையாதென்றும்; அவன் மறுபிறப்பில் உலர்ந்த எலும்புத் துண்டுகளைக் கடித்துத் தன் பசியடங்காது திரியும் சொறிபிடித்த தெரு நாயாகப் பிறந்து துன்புறுவான் என்ற கண்டிப்பும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் வெளியிடப் பட்டுள்ளது. இதில் விதிவிலக்கு பெறுபவர்கள் ஞானசித்தர்கள் மட்டுமே என்ற குறிப்பு இருப்பதால்தான் ஞானசித்தராகிய இராமலிங்க அடிகளாரைப் போற்றுகிறோம். ஆனால், அவர் கூறிய 'பலிமறுத்தல்', 'புலால் உண்ணாமை' ஆகிய இரண்டு கருத்துக்களை வன்மையாகக் கண்டிக்கிறோம், மறுக்கிறோம், எதிர்க்கிறோம்.

தங்களது வினாவில் உயிர்க்கொலை செய்வது பாவமல்லவா என்று வினவியிருக்கிறீர்கள். பதினெண்சித்தர்களின் உண்மையான இந்துமதப்படி உயிர் அழியாதது, அதை யாரும் கொல்ல முடியாது, அது எண்ணற்ற பிறப்புக்களை எடுத்து ஆவியோடும், ஆன்மாவோடும் ஒன்றி முச்சித்தி நிலையைப் பெற்று இயற்கையோடு கலக்கும். அதாவது அணுக்களாகப் பிரிந்து கலக்கும். எனவே, உயிர்க் கொலை என்பதற்கு இடமில்லை. இந்தச் சொல்லே பொருளற்றது.

பதினெண்சித்தர்கள் அருளுலக பத்தி சத்தி சித்தி முத்தி எனும் நான்கினையும் பெறுவதற்குரிய பூசைப் பொருளே இம் மண்ணுலகிலுள்ள பயிரினங்களும் உயிரினங்கலும் என்று மிகத் தெளிவாக விளக்கமாக ஆணையிட்டுக் கூறுகிறார்கள். இதனை,

*"பொன்னுக்கும் ஓட்டுக்கும் மாறுபாடு கருதாதே;*
*புலாலுக்கும் பயிருணவிற்கும் வேறுபாடு கருதாதே;*
*குருவுக்கும் திருவுக்கும் முரண்பாடு கொள்ளாதே;*
*அனைத்தும் இணைத்து ஒன்றென உணர்வதே ஞானம்"*

என்ற குருவாக்கியம் மிகத் தெளிவாக மேற்சொன்ன கருத்தை விளக்குகிறது.



11வது ஞானச்சாரியார், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார். இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகச் செயல்பட்டு தமிழின அருட்பேரரசான பிற்காலச் சோழப்பேரரசை (கி.பி.785 - கி.பி.1279) உருவாக்கினார்.

இவருக்கு அடுத்துப் பீடாதிபதியாகப் பட்டமேற்ற 12வது ஞானச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை இந்தச் சுற்றறிக்கையின் மூலம் வழங்குகின்றோம்.

சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் குருதேவர் அமைத்த சித்தர் கோயிலில் மட்டுமே உள்ள அம்மையப்பர் வடிவம்.



Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar and the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்)
Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09840730609
Printed at Kavin Printers, Madurai

www.gurudevar.org Email: indhuism@gmail.com